கள்ளத்தொடர்பு இருந்ததால் தன்னிச்சையாக அவருடன் சென்றிருக்கிறார் என்றுதான் தெரியவருகிறது. இருப்பினும், இதுகுறித்து காவல்துறையினர் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்து, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

முற்பகல் *11-20*

3. காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் ராஜினாமா செய்திருப்பதாக பத்திரிகைகளில் வந்துள்ள தவறான செய்தி குறித்து-மாண்புமிகு பேரவைத் தலைவரின் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு சிறு விளக்கம். பத்திரிகைகளில் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் ராஜினாமா செய்து விட்டதாக செய்திகள் வெளியிட்டு இருக்கிறார்கள். பேரவையின் உறுப்பினர்கள் ராஜினாமா செய்வது என்பதற்கு சில பல விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. அது பேரவைத் தலைவரிடத்தில் நேரடியாக கொடுக்கப்பட வேண்டும். அது அவர்களுடைய சுய விருப்பத்தின் பேரில், வேறு எத்தகைய வற்புறுத்தலும் இல்லாத வகையில் அமைய வேண்டும். அப்படிக் கொடுக்கப்படுவதுதான் உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் ராஜினாமாக் கடிதங்கள் ஆகும். பேரவைத் தலைவரிடத்தில் கொடுக்காத எதுவும் ராஜினாமாக் கடிதங்களாகக் கருதப்பட மாட்டாது; ராஜினாமாக் கடிதம் என்கிற பேச்சுக்கே இடமில்லை; ராஜினாமா என்கிற பேச்சுக்கும் இடமில்லை. பேரவைத் தலைவரிடத்தில் எப்போது அது கொடுக்கப்படுகிறதோ, அப்போதுதான் அது ராஜினாமா என்று வருமே தவிர, வேறு வகைகளில்—ஏதோ கடிதங்கள் இருக்கின்றன, இதை அவரிடத்தில் கொடுக்கிறார்கள். இதை இவரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். இவர் போய்க் கொடுக்கிறார் என்பது எல்லாம் வேறு வகையான கடிதங்களாக இருக்கலாமே தவிர, ராஜினாமாக் கடிதங்களாக இருக்க முடியாது.

அதற்கு அடுத்து, திரும்பத் திரும்ப சில பத்திரிகைகளிலேயும், வானொலி, தொலைக்காட்சியிலேயும், ஏதோ இங்கே ஜனநாயக விரோதமாக காரியங்கள் நடக்கின்றன; ஆகவே இந்த முடிவை

அவர்கள் எடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. என்ன ஜனநாயக விரோதம் என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே பேச அனுமதிப்பது இல்லை, பேச அனுமதிப்பது இல்லை என்பது வேறு ஒரு வகையில் வெளியிலே இவர்கள் வெளியிட்டு வரக்கூடிய குற்றச்சாட்டு.

இந்த விவகாரம் ஆரம்பித்ததே, ஒருவரைப் பேச விட்டதில் வந்த விவகாரம்தான். ஒருவரைப் பேச அனுமதித்து, அவர் பேசுகிறபோது, மகான் மகாத்மா காந்தி அவர்களையும், பாரதப் பிரதமராக இருந்த ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு அவர்களுடைய குடும்பத்தினரைப் பற்றியும் இழிவுபடுத்துகிற வகையில் ஒரு கருத்தைச் சொன்ன நேரத்தில், அதற்கு மறுப்புத் தெரிவித்து திரு. சஞ்சய் ராமசாமி அவர்கள் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து எழுந்த பிரச்சினையில், அவர்கள் கண்டனம் தெரிவித்தவர்களை அடிக்கப் போய், அடிக்கப் போனவர்களை, அடித்தவரை நான் வெளியேற்றி, அதன் காரணமாக வெளியே போய் காவலர்களை எதிர்க் கட்சித் தலைவரும், ஏனைய சில காங்கிரஸ் உறுப்பினர்களும் தாக்கியதால் ஏற்பட்ட பிரச்சினையை இவர்கள் இந்த அளவுக்குப் பெரிதுபடுத்தி இது ஜனநாயக விரோதம் என்கிறார்கள்.

அப்பேர்ப்பட்ட உயரிய தலைவர்கள் மீது களங்கம் கற்பிக்கிற கருத்தைச் சொன்னதற்கு இப்போதாவது பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களிடத்திலே கேட்டுக் கொண்ட பின்னரும்கூட, அதற்குப் பரிகாரம் தேடுகிற வகையில், அதற்காக வருத்தமோ, மன்னிப்போ கேட்பதை விடுத்து, பிரச்சினையை எங்கோ திசை திருப்புவதற்காக இரண்டு, மூன்று நாட்கள் இவர்கள் ஆடிய நாடகத்தை ஜனநாயக விரோதம் என்று வெளியிலே சொல்கிறார்கள் என்று சொன்னால், இதை இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வளவு பெருந்தன்மையாக, இந்த நேரத்திலாவது பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் என்று சொன்னதை ஏற்று, "அவ்வளவு பெரிய உயரிய தலைவர்களுக்கு நாங்கள் களங்கம் கற்பித்து விட்டோம்." அந்த நேரத்திலாவது 'நாங்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம், மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்' என்று சொல்லி இருப்பார்களேயானால், இந்தப் பிரச்சினை அன்றோடு முடிந்து போயிருக்கக்கூடிய பிரச்சினையாகி இருக்கும். அதை விடுத்து, தாங்கள் மாபெரும் தலைவர்களுக்குச் செய்த களங்கத்தை நாட்டு மக்களுடைய சிந்தனையிலே இருந்து மறைப்பதற்காக, இவர்கள் வெளியிலே போய் காவலர்களைத் தாக்கியது மட்டுமல்லாமல்,

அதன் மீது நடவடிக்கை எடுத்தால், அது ஜனநாயக விரோதமா? இந்த நாட்டினுடைய பிரஜை, ஒரு தனி மனிதன் யாரேனும்—இவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள்; அவர் எதிர்க் கட்சித் தலைவர் என்பதற்காக அடி வாங்க வேண்டும்; அதன் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது; இரத்தக் காயம் ஏற்பட்டால் கூட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று இருப்பதுதான் ஜனநாயகமா?

முற்பகல் 11.25

எனவே, இதை எல்லாம் மேலே இருக்கிற தங்களுடைய கட்சி எஜமானர்கள் கேள்வி கேட்பார்களோ, கண்டிப்பார்களோ என்பதற்காக நாடகம் ஆடுவதற்காக இதைத் தெரிவிக்கிறார்கள் என்று தான் கருதுகிறேன். கொஞ்ச நாளைக்கு முன்னாலே ஒரு தலைவர் சொல்கிறார், எங்கள் கட்சி உறுப்பினர்கள் எல்லா சட்டமன்றக் குழுக்களிலே இருந்தும் ராஜினாமா செய்து விட்டோம் என்று. ஒரு ராஜினாமாவும் எனக்கு வரவில்லை. எல்லோரும் எல்லா குழுக் கூட்டங்களிலேயும் வந்து கலந்து கொண்டுதான் இருந்தார்கள். அதற்குப் பிறகு இன்னொரு தலைவர் சொல்கிறார்—போன சனிக்கிழமை பத்திரிகைகளிலே எல்லாம் வந்தது--திங்கட்கிழமை அன்று போய் சட்டசபை சபாநாயகரிடத்திலே எங்கள் உறுப்பினர்கள் 24 பேர் ராஜினாமா கொடுப்பார்கள் என்று. எந்த ராஜினாமாவும் எனக்கு வரவில்லை. அதற்குப் பிறகு 40 உறுப்பினர்கள் ராஜினாமாக் கடிதம் கொடுத்து விட்டார்கள் என்று வருகிறது சில பத்திரிகைகளில். காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜினாமா என்று மட்டும் அவர்கள் எல்லாம் போடுகிறார்கள். எந்த ராஜினாமாவும் எனக்கு வரவில்லை. ஆனால் இந்த ராஜினாமா என்று சொல்வது, பேரவைத் தலைவருக்கு வந்தால் தான் ராஜினாமா என்கிற பேச்சே வரும். எனவே அதுவரையில் ராஜினாமா என்பது இல்லை என்பது தான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை. நான் சொன்னதைப் போல, தாங்கள் செய்த மிகப் பெரிய தவறை நாட்டு மக்களிடத்திலிருந்து மறைப்பதற்காக இத்தகைய நாடகங்களையும், செய்திகளையும் தொடர்ந்து 6, 7 நாட்களாக வெளியிட்டு வருகிறார்கள் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் எப்படி நடந்து கொள்கிறார்கள், எவ்வளவு அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள் என்பது மேலிடத்திற்குத் தெரிந்து, எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவரும்,

பிரதமருமான திரு. நரசிம்மராவ் அவர்களுக்குத் தெரிந்து, இன்று ஒரு இங்கிலீஷ் பத்திரிகையில் மிக அழகாக 'அவர்களுடைய நடவடிக்கை எரிச்சலைக் கொடுக்கிறது' என்பதைப் போல கணித்து இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்திகள் வரலாம். செய்திகள் வருவதைப் பற்றி ஒன்றுமில்லை. பத்திரிகையினர் வெளியிடுகிற செய்திகள் தான். நான் சொன்னதைப் போல தாங்கள் செய்த ஒரு மிகப் பெரிய தவறை இந்த நாடு போற்றுகிற இரு பெரும் தலைவர்களை இங்கே களங்கப்படுத்தி விட்டு அதிலேயிருந்து தாங்கள் தப்பிப்பதற்காக இத்தனை பிரச்சினைகளையும் உருவாக்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

4. கவன ஈர்ப்பு

(அ) மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை ஏற்படுத்தக்கோரி வழக்கறிஞர்கள் போராடுவதால் தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஓ.எஸ். அமர்நாத், திரு. கே. தவசி. திரு. சஞ்சய் ராமசாமி, திரு. டி. வேலையா, திருமதி வி.ஜி. மணிமேகலை, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர்நீதிமன்றக் கிளையினை மதுரையில் அமைத்திட அரசு எல்லாப் பணிகளையும் செய்துள்ள நிலையில், மேலும் தாமதம் ஆகி வருவதால் வழக்கறிஞர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் தென் மாவட்ட வழக்கு மன்றங்களில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :